OS.26/2021

Dated.17.08.2023

Name : எட்டுராஜ்

Time: 02.55 PM

<u>4 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். மைனர் இளங்கோவன் பெயரில் தாவா சொத்து கிரையம் வாங்கிய தேதி 14.04.1991 ஆகும். கிரைய ஆவணத்தின் எண் எனக்கு தெரியாது.

2. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் மோசடி கிரைய ஆவணம் குறித்து எனக்கு தெரியாது. பிரமாண வாக்குமூலத்தை யார் தயார் செய்து கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. தயார் செய்து வைக்கப்பட்ட வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தேன்.

3. 1 சொத்திற்கு மட்டும் தான் வழக்கு நடைபெறுகிறது. அதன் விஸ்தீரணம் 33. 1/2 செண்ட் ஆகும். தாவா சொத்தில் ஒரு வீடு உள்ளது. மீதமுள்ள இடம் காலியிடமாக உள்ளது.

4. தாவா சொத்து அமைந்துள்ள இடத்தின் மதிப்பு 1 செண்டிற்கு ரூ.1. 1/2 இலட்சமாக இரண்டு வருடங்களுக்கு முன்பு இருந்தது. வீட்டின் மதிப்பு ரூ.4 இலட்சமாக இருந்தது. தாவா சொத்து 4 முதல் 8 பிரதிவாதிகளின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

5. வாதிகள் எனது உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக தாவா சொத்து வாதிகளின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்று பொய்யாக வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.